**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 103/2019 |
| | | P/W's | : | PW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | S. இளங்கோ | CASTE | : | |
| S/O | சாமியப்பர் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | கோடாங்கிபட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 64 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. வழக்குச்சொத்தை வாதியின் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதைக்காட்டும் ஆவணங்களை பார்த்துள்ளேன். வழக்குச்சொத்துக்கள் வாதியின் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதற்கு கிரையப்பத்திரம் எதுவும் இல்லை, அது பூர்வீக சொத்து. வழக்குச்சொத்திற்கு பட்டா கூட்டுப்பட்டாவாக இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான்தான் சொன்னேன். வாதி அவரது வழக்கறிஞர் அலுவலகத்திற்கு என்னை அழைத்துச்சென்று அங்கு வைத்து எனது நிரூபண வாக்குமூல சங்கதிகளை சொன்னேன் என்றால் சரிதான்.

2. வழக்குச்சொத்தின் விஸ்தீரணம் 44 செண்டு. எனது சகோதரர் கிராம நிர்வாக அலுவலராக இருந்ததால் வழக்குச்சொத்தின் விவரம் எனக்குத்தெரியும். வழக்குச்சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா எண் எனக்குத்தெரியாது. வாதியை எனக்கு 30 முதல் 40 வருட காலமாக தெரியும். வழக்குச்சொத்தை வாதியும் பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே அவர்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்ட விவரம் எனக்குத்தெரியும் என்றால் சரிதான். பாகம் பிரித்துக்கொண்டபின் அவரவர் பாகத்தினை தனித்தனியாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான்.

3. வழக்கின் 1ம் இலக்கச்சொத்து சோத்தானுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு அதனை அழகு மகன் முருகேசனுக்கு 30.08.2011தேதியில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்இ அதன் பத்திரத்தின்மீது தான் வழக்குப்போட்டுள்ளார்கள். 2ம் இலக்கச்சொத்தின் அழகுவின் மனைவி பெயரில் 30.08.2011தேதியில் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்குச்சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் இல்லையென்றாலும் வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி

குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின்படி வாதிக்கு வீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. வழக்கைப்பற்றி எனக்கு தெரியாமல் வாதி சொல்லி கொடுத்ததுபோல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறு விசாரணை**

வாதி குடும்பத்தினரிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின் வழக்குச்சொத்துக்கள் பிரிக்கப்பட்டதா என்றால் பிரிக்கப்படவில்லை.

**மறு குறுக்கு விசாரணை**

வாதி குடும்பத்தினரிடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் வழக்குச்சொத்துக்கள் பிரிக்கப்படவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True Copy//
Sd/- M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.